**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அரியலூர்.**

**அசல் வழக்கு எண்.330/2011**

**பெயர் :** இளந்தமிழன் **பி.வா.சா.1.** **நாள் : 11.03.2019.**

பிரதிவாதி சாட்சியான பி.வா.சா.1. இளந்தமிழன் என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.பு.அன்புமணி, கிரேடு III பென்ஞ்கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளந்தமிழன் | கிராமம் | : | பளிங்காநத்தம் |
| தகப்பனார் பெயர் | : | சரவணவேல் | வட்டம் | : | அரியலூர் |
| கணவர் பெயர் | : | - | மாவட்டம் | : | அரியலூர் |
| ஜாதி | : | - | சமயம் | : | இந்து |
| வயது | : | 40 | தொழில் | : | விவசாயம் |

**பி.வா.சா.1. முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சியம் குறித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.1. தாவா சொத்தை அளவீடு செய்ததற்கு தலைமை துணைவட்டாட்சியர் வழங்கிய அளவைச் சான்றிதழ் பி.வா.சா.ஆ.2. தாவா சொத்திற்கு எனது பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் பி.வா.சா.ஆ.3. தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் பெயரில் உள்ள கணினி பட்டா பி.வா.சா.ஆ.4. தாவா சொத்திற்கு எனது பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டு கணினி பட்டா பி.வா.சா.ஆ.5. தாவா சொத்திற்கு புள்ளம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 01.01.1998 முதல் 11.03.2010 வரை உள்ள காலங்களுக்கு பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் பி.வா.சா.ஆ.6. தாவா

சொத்திற்கு புள்ளம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 01.01.1987 முதல் 29.07.2010 வரை உள்ள காலங்களுக்கு பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் பி.வா.சா.ஆ.7. தாவா சொத்திற்கு எனது பெயரில் 2011ம் ஆண்டு செலுத்திய நிலவரி இரசீது பி.வா.சா.ஆ.8. தாவா சொத்திற்கு எனது பெயரில் 2012ம் ஆண்டு செலுத்திய நிலவரி இரசீது பி.வா.சா.ஆ.9. தாவா சொத்திற்கு எனது பெயரில் 2012ம் ஆண்டு செலுத்திய நிலவரி இரசீது பி.வா.சா.ஆ.10. வாதியின் தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(ஒம்/-) இளந்தமிழன்

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகளின் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) எம். மாணிக்கம்.
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அரியலூர்.